மின்னஞ்சல் பெறப்பட்ட நாள் - 6-8-24 நேரம் - 04-22pm

அனுப்புநர்
முனைவர்.ச.கண்ணப்பன்,
பள்ளிக் கல்வி இயக்குநர்,
பள்ளிக் கல்வி இயக்ககம்,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
சென்னை-600 006

பெறுநர்
அரசு சிறப்பு வழக்கறிஞர் (கல்வி)
சென்னை உயர்நீதிமன்றம்,
சென்னை.

07 AUG 2024

பெறப்பட்டது

ந.க.எண்.023902/கே/இ1/2024 நாள்: .07.2024.

பொருள் பள்ளிக்கல்வி – சென்னை உயர்நீதிமன்ற வழக்கு – மனுதாரர்கள் V.பத்மா மற்றும் 29 நபர்கள் உயர்கல்வி பயின்றமைக்கு தகுதியுள்ள ஊக்க ஊதிய உயர்வுத் தொகையினை அனைத்து பணப்பயன்கள் மற்றும் நிலுவையுடன் வழங்க கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த W.P. No. 3862 of 2024 மற்றும் W.M.P. No.4172 & 4175 of 2024 வழக்குகளின் மீதான 20.02.2024 நாளிட்ட தீர்ப்பாணை – ஊக்க ஊதிய உயர்வு சார்ந்த அரசாணைகளை எதிர்த்து தொடரப்படும் வழக்குகளுக்கு பயன்படும் வகையில் பெறப்பட்ட தீர்ப்பாணை விவரத்தினை தெரிவித்தல் – சார்ந்து

பார்வை

1. அரசாணை (நிலை) எண்.37, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை (அ.வி–IV) துறை, நாள்.10.03.2020.
2. அரசாணை (நிலை) எண்.116, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை (அ.வி–IV) துறை, நாள்.15.10.2020.
3. மனிதவள மேலாண்மைத் துறையின்அரசாணை (நிலை) எண்.120, மனித வள மேலாண்மை (அ.வி–IV)த்துறை, நாள்.01.11.2021.
4. அரசு கடித எண்.4470/FR–IV/2022–1 மனித வள மேலாண்மை (அ.வி–IV) த்துறை, நாள்.18.02.2022.
5. மனிதவள மேலாண்மைத் துறையின் அரசாணை (நிலை) எண்.95, மனித வள மேலாண்மை (அ.வி–IV)த்துறை, நாள்.26.10.2023.
6. மனுதாரர்கள் V.பத்மா மற்றும் 29 நபர்கள் உயர்கல்வி பயின்றமைக்கு ஊக்க ஊதிய உயர்வு தொகையினை நிலுவையுடன் வழங்க கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த W.P. No. 3862 of 2024 மற்றும் W.M.P. No.4172 & 4175 of 2024 வழக்குகளின் மீதான 20.02.2024 நாளிட்ட தீர்ப்பாணை
7. திரு.K.செல்வராஜ் மற்றும் 99 நபர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த W.P. No.1659 of 2024 மற்றும் W.M.P. No.1694 & 1696 of 2024 வழக்கின் மீதான 30.01.2024 நாளிட்ட தீர்ப்பாணை
8. இவ்வியக்ககத்தின் இதே எண்ணிட்ட கடிதம் நாள்.11.05.2024

பார்வை (5)ல் காணும் அரசாணையை ரத்து செய்யக் கோரியும், உயர்கல்வி பயின்றமைக்கு தகுதியுள்ள ஊக்க ஊதிய உயர்வுத் தொகையினை அனைத்து பணப்பயன்கள் மற்றும் நிலுவையுடன் வழங்கக் கோரியும், மனுதாரர்கள் V.பத்மா மற்றும் 29 நபர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த W.P. No. 3862 of 2024 மற்றும் W.M.P. No.4172 & 4175 of 2024 வழக்குகளின் மீதான 20.02.2024 நாளிட்ட தீர்ப்பாணையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. 10.03.2020க்கு முன்னர் உயர்கல்வித் தகுதி பெற்று முதலாவது அல்லது இரண்டாவது ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்படாத நிலையில் V.பத்மா மற்றும் 29 நபர்களால் வழக்கு தொடரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. பார்வை (1)ல் காணும் அரசாணையின்படி 10.03.2020க்கு முன் உயர்கல்வி தகுதி பெற்றவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும்.

3. வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறையில் வழங்கப்பட்டதை போன்று ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும் என மனுதாரர்களால் கோரப்பட்டுள்ளது.

4. பார்வை (1)ல் காணும் அரசாணை பக்கம்.4 பத்தி 6(vi) மேற்கோள்காட்டி ஊக்க ஊதிய உயர்வு குறித்த தெளிவுரை விளக்கப்பட்டுள்ளது.

5. பார்வை (3)ல் காணும் அரசாணையின்படி அரசு ஊழியர்கள் பெற்ற உயர்கல்வித் தகுதிக்கு, ஊக்க தொகையினை ஒரே முறையில் ஒட்டு மொத்த தொகையாக One time lumpsum amount பின்வருமாறு வழங்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ள விவரம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது

| வ. எண் | கூடுதல் கல்வித்தகுதி தேர்ச்சி | தொகை(ரூ) |
|---|---|---|
| 1 | முனைவர் (Ph.D) படிப்பு | 25,000/- |
| 2 | பட்ட மேற்படிப்பு (PG) அல்லது அதற்கு சமமானது | 20,000/- |
| 3 | பட்டப்படிப்பு /பட்டயப்படிப்பு | 10,000/- |

6. இவ்வாறு ஊக்க ஊதிய உயர்வினை ஒட்டு மொத்த தொகையாக (One time lumpsum amount) வழங்கும் அரசின் நிலைப்பாடு, நிலுவையிலுள்ள ஊக்க ஊதிய உயர்வு சார்ந்த விண்ணப்பங்களை விரைவாக தீர்வு செய்வதற்கும், இன்றைய நிலையில் உயர் கல்விக்கான ஊக்க ஊதிய உயர்வு பெறுபவர்களுக்கும் மற்றும் எதிர்காலங்களில் ஊக்க ஊதிய உயர்வினை பெறப்போகிறவர்களுக்கும் இடையே சமத்துவம் மற்றும் ஒரே மாதிரியான நடைமுறையினை கையாளுவதற்கு உறுதி அளிப்பதாக உள்ளது எனவும் பார்வை (5)ல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

7. எனவே, பார்வை (5)ல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி 10.03.2020க்கு முன்பதாக உயர்கல்வி பெறப்பட்டிருப்பினும் பழைய ஊக்க ஊதிய உயர்வு திட்டத்தின்படி ஊக்க ஊதிய உயர்வினை பெற தகுதியில்லை எனவும், புதியதாக ஆணை வழங்கப்பட்ட நிலையில் உயர்கல்வித் தகுதி பெற்று இன்றைய நிலையில் ஊக்க ஊதிய உயர்வு பெறாதவர்கள் ஒட்டுமொத்த தொகையினை மட்டுமே பெறுவதற்கு தகுதியுடையவர்கள் ஆவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

..டுதல் கல்வித் தகுதி பெற்றவர்கள் ஒட்டு மொத்த தொகையாக மட்டுமே ஊக்க ..திய உயர்வினை பெறுவதற்கு தகுதியுடையவர்கள் ஆவார்கள் எனவே, மனுதாரர்களின் கோரிக்கையினை பரிசீலிக்க இயலாது. மேலும், தகுதியிழந்த நிலையில் மனு தள்ளுபடி செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சென்னை உயர்நீதிமன்றத்தில் திரு.S.மூர்த்தி மற்றும் 49 ..களால் தொடரப்பட்ட W.P.No.1605 of 2024 வழக்கின் மீதான தீர்ப்பாணை ..01.2024 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

இத்தீர்ப்பாணையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

19. ........................ a policy decision by a competent authority would not come within the purview of judicial review. The courts should resist itself from embarking upon a venture over decision reached on a consideration of relevant materials. The policy decision can only be challenged on the ground of illegality, as being contrary to law or any constitutional provision. In this case, no such grounds are made out for judicial review. The policy decision can be interfered by the Court only when the decision making process is initiated by the malafideness, unreasonableness or arbitrariness and overwhelming public interest. Here, no such grounds are made out to interfere with the decision making process by the Government. In fact, after analysing the entire relevant materials and facts, policy decision has been taken by the first respondent following the decision taken by the Government of India based on the recommendations of the VIIth Central Pay Commission which would not fall under illegality, unreasonable and arbitrariness against public interest or contrary to any incumbent or constitution of India. That apart, as per G.O.Ms.No.95 dated 26.10.2023, a lump-sum payment ordered to pay for higher qualification instead of incentive in the salary for higher qualification. https://www.mhc.tn.gov.in/judis W.P.Nos.1605 of 2024 etc., batch cases

20. Therefore, this court cannot find any infirmity or illegality in G.O.Ms.No.95, Human Resources Management (FR-IV) Department, dated 26.10.2023. Hence, all the writ petitions are devoid of merits and liable to be dismissed. Accordingly, all the Writ Petitions are dismissed. No costs. Consequently, connected miscellaneous petitions are closed.

திரு.K.செல்வராஜ் மற்றும் 99 நபர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த W.P. No.1659 of 2024 மற்றும் W.M.P. No.1694 & 1696 of 2024 வழக்கின் மீதான 30.01.2024 நாளிட்ட தீர்ப்பாணையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

9. Now, as per the Government Orders, those who had completed additional qualification are entitled to have only lumpsum incentive. Therefore, the request of the petitioners cannot be considered. As such, this writ petition is devoid of merits and liable to be dismissed.

10. Accordingly, this writ petition is dismissed. Consequently, connected miscellaneous petitions are closed. There shall be no order as to costs.

மேலும், சென்னை உயர்நீதிமன்றத்தில் திரு.M.குணசேகரண் மற்றும் 223 நபர்களால் தொடரப்பட்ட W.P.No.2414 of 2024 வழக்கின் மீதான தீர்ப்பாணை 05.02.2024 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

இத்தீர்ப்பாணையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

Thus, the clarification issued in G.O. (Ms)No.116, Personnel and Administrative Reforms (FR-IV) Department, dated https://www.mhc.tn.gov.in/judis 15.10.2020 and Letter No.4470/FR-IV/2022-1, Human Resources Management (FR-IV) Department, dated 18.02.2022 are harmonized to ensure that, all pending applications as on 10.03.2020 and claims made subsequently for sanction of benefits for having acquired higher educational qualifications shall be disposed as per this new scheme of granting lumpsum incentives only and not the earlier scheme of granting increments in salary. This principle would ensure expeditious disposal of all pending claims, and also maintain parity and equal treatment between the claims pending as on date and for the persons acquiring higher educational qualifications in future also. Even though many Government servants have acquired their higher educational qualification prior to 10.03.2020, as per the orders issued in G.O. (Ms) No. 95, Personnel and Administrative Reforms (FR-IV) Department, dated 26.10.2023, they are not eligible for sanction of advance increment for acquiring higher qualification since by the orders issued in the above, the lumpsum amount shall be granted only for those who have acquired higher qualification and not sanctioned with advance increment till date. https://www.mhc.tn.gov.in/judis

9. Now, as per the above Government Orders, those who had completed additional qualification are entitled to have only lumpsum incentive. Therefore, the request of the petitioners cannot be considered. As such, this writ petition is devoid of merits and liable to be dismissed.

10. Accordingly, this writ petition is dismissed. Consequently, connected miscellaneous petition is closed. There shall be no order as to costs.

எனவே, பெறப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பாணைகளை கருத்தில் கொண்டு, சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ள பார்வையில் குறிப்பிட்டுள்ள அரசாணைகளை எதிர்த்து தொடரப்பட்ட வழக்குகளுக்கு தாக்கல் செய்யப்படும் எதிர்வாதவுரையிலும், எதிர்வாதவுரை ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் தாக்கல் செய்யப்படும் கூடுதல் எதிர்வாதவுரையிலும் இத்தீர்ப்பாணைகளை பயன்படுத்திக் கொள்வதற்கு, ஏதுவாக பெறப்பட்ட தீர்ப்பாணை விவரங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது என்ற விவரம் கனிவுடன் தெரிவிக்கலாகிறது.

மேலும், இதுபோன்ற ஒத்தநேர்வுடைய வழக்குகளை ஒரு தொகுப்பு வழக்குகளாக சேர்த்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ள ஆவண செய்யும்படியும் பணிவுடன் வேண்டப்படுகிறது.

பள்ளிக்கல்வி இயக்குநர்

**இணைப்பு:** பார்வை (6&7) ல் காணும் தீர்ப்பாணைகள் மற்றும்
W.P.No.1605/2024 & 2414/2024 வழக்குகளின்
தீர்ப்பாணை நகல்.

**நகல்**

அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்.